ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2384/42 - 2024 මැයි මස 17 වැනි සිකුරාදා - 2024.05.17

*2384/42 ஆம் இலக்கம் – 2024 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 10/2015*

**(*351 ஆம் அத்தியாயமான*) குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டம்**

(*351 ஆம் அத்தியாயமான*) குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தின் *23* ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் *52* ஆம் பிரிவின்கீழ் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டவையும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டவையுமான ஒழுங்குவிதிகள்.

**டிரான் அலஸ்,**
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்.

கொழும்பு,
*2024*, ஏப்பிறல் *26*.

**ஒழுங்குவிதிகள்**

*1956* ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் *24* ஆந் திகதிய *10,896* ஆம் இலக்க இலங்கை அரச வர்த்தமானிக்கான குறைநிரப்பியில் வெளியிடப்பட்டவையும் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறானவையுமான *1956* ஆம் ஆண்டின் குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் ஒழுங்குவிதிகள், அவற்றின் *13* ஆம் ஒழுங்குவிதியில், "*2.* வருகை விசா" என்ற தலைப்பின் கீழான பட்டியலில் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன :-

(*1*) அதன்கண் விதிக்கப்பட்ட *1* ஆம் விடயத்தில் "*2024.03.31* வரையிலான" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "*2024.04.30* வரையிலான" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

1A - G 41950 — 05 (2024/05)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(2) அதன்கண் விதிக்கப்பட்ட 4 ஆம், 5 ஆம் விடயங்களை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

| *விசா* | *விசாவின் வகை* | *கட்டணம்*<br>*ஐக்கிய அமெரிக்க டொலர்*<br>*(ஐஅடொ)* |
|---|---|---|
| 2. வருகை விசா | *சுற்றுலாப் பயண நோக்கங்களுக்காக* | |
| | 4. நியம வருகையாளர் விசா - சுற்றுலாப் பயணி செக் குடியரசு, மாலைதீவு, சீஷெல்ஸ் மற்றும் சிங்கப்பூர் தவிர்ந்த ஏதேனும் நாடு<br>(முப்பது நாட்கள் வரை)<br>(தனி உட்பிரவேசம்) | குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் தலைமையலுவலகத்திலிருந்து, இயங்கலை மூலம் அல்லது வந்தடைவதன் மீது<br>50.00 |
| | 5. நியம வருகையாளர் விசா - சுற்றுலாப் பயணி மாலைத்தீவு தவிர்ந்த பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பு (சார்க்) நாடுகளுக்காக<br>(நூற்றியெண்பது நாட்கள் வரை)<br>(ஒவ்வொரு தங்கியிருக்கையும் அறுபது நாட்கள் வரை மட்டுப்படுத்தப்படும்) | குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் தலைமையலுவலகத்திலிருந்து, இயங்கலை மூலம் அல்லது வந்தடைவதன் மீது<br>35.00 |
| | 5அ. நியம வருகையாளர் விசா - சுற்றுலாப் பயணி பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பு (சார்க்) நாடு தவிர்ந்த ஏதேனும் நாடு, செக் குடியரசு, சீஷெல்ஸ் மற்றும் சிங்கப்பூர்<br>(நூற்றியெண்பது நாட்கள் வரை)<br>(ஒவ்வொரு தங்கியிருக்கையும் அறுபது நாட்கள் வரை மட்டுப்படுத்தப்படும்) | குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் தலைமையலுவலகத்திலிருந்து, இயங்கலை மூலம் அல்லது வந்தடைவதன் மீது<br>75.00 |

EOG *05-0134*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*